OL/2024(2025)/11/T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

11 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

| | | |
|---|---|---|
| බුද්ධ ධර්මය I, II<br>பௌத்தம் I, II<br>Buddhism I, II | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## பௌத்தம் I

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

※ **உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** சுத்தோதன மன்னன் இளவரசன் சித்தார்த்தருக்கு மூன்று பருவகாலங்களுக்கும் வசிப்பதற்கு ஏற்றவாறு மூன்று மாளிகைகளைக் கட்டுவதில் எதிர்பார்த்த நோக்கங்களுக்கு **உரியதல்லாத** விடயம்

(1) சக்கரவர்த்தி ராஜாவாகும் எதிர்பார்ப்புக்கு தடை ஏற்படுத்தாதிருத்தல்
(2) இல்லற வாழ்க்கைக்கு வரும் தடைகளை இல்லாதொழித்தல்
(3) லௌகிக வாழ்க்கைக்குப் பொருத்தமான வழியைக் காட்டுதல்
(4) மாளிகைக்கு வெளியே உள்ள உலகமே யதார்த்தமானது என்பதை விளங்கிக்கொள்ளச் செய்தல்

**2.** வாழ்க்கையில் வெற்றியடைவதற்கு ஏற்படும் சவால்களில் வெற்றியடைவதுடன் உடனடியாகத் தீர்மானங்களை எடுக்காது நன்கு சிந்தித்து ஆராய்ந்து செயற்பட வேண்டும். இதற்காக போதிசத்துவர் சித்தார்த்தரின் வாழ்க்கையில் காட்டப்படும் முன்மாதிரி

(1) கிம் குசலகவேசியாகுதல்
(2) பஞ்ச மகாவிலோகனய
(3) சிங்ஹாவலோகனய
(4) இல்லற வாழ்வைத் துறத்தல்

**3.** புத்தரின் நாற்பத்தைந்து வயது வாழ்க்கையில் அடிப்படை வசதிகள் கிடைக்கப் **பெறாத** கடினமான காலப்பகுதி

(1) பாரிலேய வனத்தில் செலவிட்ட காலப்பகுதி
(2) வேரன்ஜாவில் செலவிட்ட காலப்பகுதி
(3) உருவேலவில் செலவிட்ட காலப்பகுதி
(4) பேஷகலா பாறையில் செலவிட்ட காலப்பகுதி

**4.** புத்த பெருமான் கிரியைசார் (ஆமிச) பூசைகளை விடவும் கொள்கைசார் (பிரத்திபத்தி) பூசை மேலானது என எடுத்துக்காட்டினார். இதனால் வெளிப்படுத்தப்படுவது

(1) கிரியைசார் பூசைகளும் கொள்கைசார் பூசைகளும் சமமானவை.
(2) தானம் வழங்குவது பொருத்தமற்றது.
(3) தருமத்துக்கேற்ப வாழுதல் மிக மேன்மையானது.
(4) கொள்கைசார் பூசை மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது.

**5.** மும்மணிகளைச் சரணடைதல் கடவுளிடம், பிரம்மாவிடம், படைப்பவரிடம் உதவி பெறுவதை விட மிகவும் வேறுபட்டது. அதன் அடிப்படை

(1) நம்பிக்கை (ஸ்ரத்தா)
(2) நல்லொழுக்க நடத்தை (சீலய)
(3) பக்தி
(4) விசுவாசம்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

6. "நான் ஆரோக்கியமாக இருந்தபோது நோய்வாய்ப்பட்டிருந்த பிக்குமாரைப் பராமரிக்கச் செல்லவில்லை. ஆதலால் நான் நோய்வாய்ப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் எவரும் வரவில்லை." இவ்வாறு பாக்கியமானவருக்கு விடை கொடுக்கப்பட்டது
   (1) உடல் முழுவதும் புண்பட்டிருந்த தேரரினால் ஆகும்.
   (2) கண்கள் குருடாக இருந்த தேரரினால் ஆகும்.
   (3) பிப்பலி குகையில் நோய்வாய்ப்பட்டிருந்த தேரரினால் ஆகும்.
   (4) கொடிய வயிற்று வலியினால் துன்பப்பட்டிருந்த தேரரினால் ஆகும்.

7. ஒருவரின் பிறப்பிலிருந்து இறப்பு வரையும் அதன் பின்னரும் எதிர்பார்ப்பு, ஆசைகளற்ற (நிஷ்சரணாத்யாசயென்) நோக்குடன் சமூகப் பணிகளில் ஈடுபடுபவர்
   (1) பசேகபுத்த
   (2) சக்விதி மன்னன்
   (3) பௌத்த பிக்கு
   (4) வீடு இல்லாத ஒருவர் (அனகாரிகா)

8. இளவரசன் சித்தார்த்தனை திருமணம் செய்த இளவரசி பத்தகச்சானாவின் தந்தையின் பெயர் என்ன?
   (1) சாக்கிய மன்னன் மகாநாம
   (2) சாக்கிய மன்னன் சுப்ரபுத்த
   (3) சாக்கிய மன்னன் அமிதோதன
   (4) சாக்கிய மன்னன் விடுடஹ

9. "நான் வழங்கும் சோற்றில் தங்கியுள்ள, நான் வழங்கும் வாகனத்தில் பயணம் செய்கின்ற, என்னால் வாழ்கின்ற தச்சர் இருவர் எனக்கு மரியாதை அளிக்காது உங்களுக்கு மரியாதை செலுத்தினர்." புத்த பெருமானிடம் இக்கூற்றினைக் கூறியவர் யார்?
   (1) மாமன்னன் கோசல
   (2) மாமன்னன் பிம்பிசாரன்
   (3) மாமன்னன் சுத்தோதனன்
   (4) மாமன்னன் அஜாசத்

10. பாரமிதா குணப்பண்புகளைப் பழகிப் பயிற்சி செய்யும் ஒருவர் அவற்றை ஐந்து விடயங்களின் கீழ் நிறைவேற்றுதல் வேண்டும். அவற்றுக்கு **உரியதல்லாத** ஒரு விடயம்
   (1) பேராசை (தன்ஹா) இல்லாது தானம் முதலிய குணப்பண்புகளில் நிறைந்திருத்தல்
   (2) பெருமை (மான) இல்லாது தானம் முதலிய குணப்பண்புகளில் நிறைந்திருத்தல்
   (3) தவறான பார்வை (மித்யாதுஷ்டிய) இல்லாது தானம் முதலிய குணப்பண்புகளில் நிறைந்திருத்தல்
   (4) திறன்மிக்க விடயங்களிலான (உபாய கௌசல்ய ஞான) அறிவில்லாது குணப்பண்புகளில் நிறைந்திருத்தல்

11. சிவி ஜாதக கதையில் எங்கள் மகா போதிசத்துவர் பூரணப்படுத்திய எந்தப் பூரணத்துவம் (பாரமித்தா) வெளிப்படுத்தப்பட்டது?
   (1) முயற்சியில் பூரணத்துவம் (வீரிய பாரமிதா)
   (2) தானத்தில் பூரணத்துவம் (தான பாரமிதா)
   (3) அன்பு கருணையில் பூரணத்துவம் (மைத்திரி பாரமிதா)
   (4) சீரான மனநிலையில் பூரணத்துவம் (உபேக்ஷா பாரமிதா)

12. சம்மா சம்புத்த, பச்சேக்க புத்த, அரஹன்த புத்த என உண்மையை விளங்கிக்கொள்ளும் மூன்று முறைகள் தர்மத்தில் காட்டப்பட்டுள்ளன. இந்த மூன்று முறைகளும்
   (1) திரிசிக்ஷா (மூன்று பயிற்சிகள்) எனப்படும்.
   (2) திரிலக்சன (மூன்று இயல்புகள்) எனப்படும்.
   (3) திரிவித ரத்னா ((மும்மணிகள்) எனப்படும்.
   (4) துந்தரா போதிய (மூன்று வகை ஞானோதயம்) எனப்படும்.

13. 'தானஞ் ச தம்ம சரியா ச' என்ற செய்யுள் அடியில் காட்டப்படும் ஆசிர்வாதங்களுக்கு உரித்து **அல்லாத** விடயம் அடங்கியுள்ள தெரிவு எது?
   (1) தானம், தர்மத்தின்படி நடத்தல், உறவினர்களை உபசரித்தல்
   (2) தானம் வழங்குதல், நல்லொழுக்கம், தியானம் செய்தல்
   (3) தானம், தர்மத்தின்படி நடத்தல், சரியான தொழில் செய்தல்
   (4) உறவினர்களை உபசரித்தல், சரியான தொழில் செய்தல், தர்மத்தின்படி வாழுதல்

14. தனிநபர் அன்றாடம் செய்யவேண்டிய பணிகளை காலம் தாழ்த்தி, கவனமின்றிச் செய்தல் முட்டுக்கட்டை (நீவரண தர்ம) என தர்மத்தில் குறிப்பிடப்படுகிறது. அந்த முட்டுக்கட்டையானது
   (1) விசிகிச்சா (சந்தேகம்) எனப்படும்.
   (2) உத்தச்ச குக்குச்ச (அமைதியின்மையும் கவலையும்) எனப்படும்.
   (3) தீனமித்த (சோம்பேறித்தனம்) எனப்படும்.
   (4) வியாபாத (தீய எண்ணம்) எனப்படும்.

[பக். 3 ஐப் பார்க்க

15. பௌத்த கற்பித்தல்களுக்கு ஏற்ப மனம் மூலமான தியானத்தை (சித்த பாவனா) விருத்தி செய்வதால் பெறக்கூடிய மிக உயர்ந்த விளைவு எனக் குறிப்பிடப்படுவது
(1) சதுர்ததியான உடனான ஏழு பேறுகள் (2) சதுர்ததியான உடனான எட்டு பேறுகள்
(3) பஞ்ச அபிக்ஞா உடனான ஏழு பேறுகள் (4) பஞ்ச அபிக்ஞா உடனான எட்டு பேறுகள்

16. மீண்டும் மீண்டும் இறந்து இறந்து மீண்டும் மீண்டும் பிறந்து உயிரினங்களின் எதிர்கால வாழ்க்கையைக் காணக்கூடிய அறிவு
(1) புப்பேனிவாசானுஸ்ஸதி ஞானம் எனப்படும். (2) ர்திவித ஞானம் எனப்படும்.
(3) பரசித்தவிஜானன ஞானம் எனப்படும். (4) சுதுபப்பாத ஞானம் எனப்படும்.

17. கர்மாவுக்கு ஏற்ப தனிமனித வேறுபாடுகள் ஏற்படும் முறையை விவரிக்கும் சூல்லகம்ம விபங்க சூத்திரத்துக்கு ஏற்ப பகைமையுடன் செயற்பாடுகள் மேற்கொள்ளும் ஒருவர் அடுத்த பிறவி எடுப்பது
(1) நோயாளியாக ஆகும். (2) குறைந்த ஆயுட்காலம் உடையவராக ஆகும்.
(3) ஊனமுற்றவராக ஆகும். (4) புகழ்ச்சி இல்லாதவராக ஆகும்.

18. எல்லா மாசுகளையும் அழித்து அருகர் நிலையை அடைந்த ஒருவர் கர்மத்தின் வினைப்பயன்களுக்கான சந்தர்ப்பங்களைப் பெறாது வினைப்பயனற்ற செயல் நிலையடைதல் பௌத்த தர்மத்தில் இனங்காணப்படுவது
(1) கருக கர்ம என்றாகும். (2) கடத்தா கர்ம என்றாகும்.
(3) ஆசிண்ண கர்ம என்றாகும். (4) அஹோசி கர்ம என்றாகும்.

19. சிங்காலோவாத சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ஆசிரியரால் மாணவருக்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளில் **அடங்காத** விடயம்
(1) நல்ல ஒழுக்கமுடையவராக்குதல் (2) அவமரியாதை செய்யாதிருத்தல்
(3) நன்றாகக் கற்பித்தல் (4) நண்பர்களுக்கு அறிமுகம் செய்தல்

20. பத்தாலி சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு உணவின் அளவை அறிந்து உண்ணுவதால் கிடைக்கும் விளைவுகளுக்கு **உரியதல்லாத** விடயம்
(1) நல்ல உடல் வலிமை பெறுதல் (2) சிறந்த மனவலிமை பெறுதல்
(3) நோய்கள் குறைவடைதல் (4) சௌகரியமான வாழ்வு பெறுதல்

21. மாணவர் வாழ்க்கைக்கு சமத தியானம் (அமைதி) மூலம் பெறக்கூடிய நன்மைகளுக்கு **உரியதல்லாத** விடயம்
(1) ஞாபகசக்தி விருத்தியடைதல்
(2) ஒரு நோக்கத்தில் நிலைத்திருப்பதற்கு இயலுமாதல்
(3) விரைவாக விளங்கிக் கொள்ளும் சக்தி விருத்தியடைதல்
(4) சகவாழ்வுடன் செயற்பட இயலுமாதல்

22. நீர் வற்றிய குளத்தினால் மனம் வருந்திய முதுமையுற்ற பறவை போல ஒருவர் இளமைக் காலத்தில் இழந்து போனவை பற்றி மனம் வருந்தக்கூடாது எனக் குறிப்பிடும் தம்மபத காதாவின் முதல் இரண்டு வரிகள்
(1) "உத்தானவதோ சதிமதோ - சுசிகம்மஸ்ஸ நிசம்ம காரினோ"
(2) "அசரித்வா பிரம்மசரியங் - அலத்தா யொப்பனே தனங்"
(3) "நதங் கம்மங் கதங் சாது - யங் கத்வா அனுதப்பதி"
(4) "யோ செ வஸ்ஸசதங் ஜீவே - துஸ்ஸீலோ அஸமாஹிதோ"

23. பேராசையுள்ள, தீயொழுக்கமுள்ள பெண் அல்லது ஆண் இல்லறத்தில் ஆதிக்கமுடையவராகுதல் வீழ்ச்சிக்குக் காரணமாகும் என உபதேசம் செய்வது
(1) வசல சூத்திரய ஆகும். (2) மங்கல சூத்திரய ஆகும்.
(3) பராபவ சூத்திரய ஆகும். (4) சிங்காலோவாத சூத்திரய ஆகும்.

24. சமூகத்தில் மிக முக்கியமான இடத்தைப் பெற்ற பெண்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குவதுடன் அவர்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துதல் ஆட்சியாளர்களின் கடமை என வலியுறுத்தும் பௌத்த அரச நிர்வாக அடிப்படைக் கோட்பாடு
(1) சதர சங்கிரக வஸ்து (நான்கு வித காணிக்கைகள்) ஆகும்.
(2) தசராஜ தர்ம (பத்து அரச விழுமியங்கள்) ஆகும்.
(3) சப்த அபரிஹானிய தர்ம (வீழ்ச்சிக்கான ஏழு நிபந்தனைகள்) ஆகும்.
(4) சதர பிரம்ம விஹரண (நான்கு பிரம்ம ஒழுக்கங்கள்) ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations - Sri Lanka

25. நான்கு வகையான கர்ம விபாகவுக்கு (கர்ம விளைவு) ஏற்ப இரண்டாவது ஆத்மபவயவின் பின்னர் நிர்வாணம் அடைவதற்கு முன்னர் ஏதாவது பிறவியில் வினைப்பயன் தருவதற்கு முன்வரும் கர்மா இனங்காணப்படுவது
(1) உபபஜ்ஜவேதனிய கர்ம என்றாகும். (2) உபத்தம்பக கர்ம என்றாகும்.
(3) அபராபரியவேதனீய கர்ம என்றாகும். (4) ஆசிண்ண கர்ம என்றாகும்.

26. வருகின்ற கவலைகள் கஷ்டங்கள் அனைத்தையும் கர்மத்திடம் ஒப்படைக்காது அறிவுடைமை, திடசங்கற்பம், முயற்சி ஆகியவற்றின் மூலம் வெற்றியடைய உதவுவது
(1) உபதி சம்பத்தி ஆகும். (2) பிரயோக சம்பத்தி ஆகும்.
(3) கால சம்பத்தி ஆகும். (4) கதி சம்பத்தி ஆகும்.

27. அட்டுவா நூல்களில் சம்மா தித்தி ஐந்து வழிகளில் விளக்கப்பட்டிருப்பதுடன் சோவான் முதலிய வழிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள நான்கு மேலான உண்மைகளை உணரும் காட்சி அறிவு
(1) தியான சம்மா தித்தி எனப்படும். (2) விதர்சனா சம்மா தித்தி எனப்படும்.
(3) மார்க சம்மா தித்தி எனப்படும். (4) பல சம்மா தித்தி எனப்படும்.

28. 'அவெச்சப்பசாத' என தர்மத்தில் விவரிக்கப்படும் சொல்லின் கருத்து
(1) புத்த பெருமானின் மகாபுருஷ லட்சணத்தைப் பார்த்ததும் ஏற்படும் வியப்பாகும்.
(2) மும்மணிகளின் விழுமியங்களை உணர்ந்து கொள்வதால் ஏற்படும் வியப்பாகும்.
(3) தர்மத்தைக் கேட்ட பின்னர் உடனடியாக ஏற்படும் வியப்பாகும்.
(4) சந்தர்ப்பங்களுக்கேற்ப ஏற்படுத்தப்படும் வியப்பாகும்.

29. வாழ்க்கையின் துன்பத்தை இல்லாதொழிக்கும் முறையை விளக்கும் பட்டிலோமபட்டிச்ச முப்பாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு "வாழ்க்கையில் பற்று இல்லாதிருப்பதன் காரணமாக மீண்டும் பிறப்பு நிகழமாட்டாது" எனக் குறிப்பிடப்படுவது
(1) "வேதனாநிரோதா தண்ஹானிரோதோ" என்றாகும்.
(2) "தண்ஹானிரோதா உபதானனிரோதோ" என்றாகும்.
(3) "உபதானனிரோதா பவனிரோதோ" என்றாகும்.
(4) "பவனிரோதா ஜாதினிரோதோ" என்றாகும்.

30. மைத்திரியை (அன்பும் கருணையும்) பயிற்சி செய்வதனால் பெறும் வெகுமதிகள் வகையினைச் **சாராத** விடயம்
(1) மனிதரல்லாதவற்றை நேசித்தல்
(2) தெய்வீகப் பாதுகாப்பு பெறுதல்
(3) நினைவு இல்லாத இறப்பு
(4) மரணத்தின் பின்னர் பிரம்மலோகத்தில் பிறவி எடுத்தல்

31. கடமைகளையும் உரிமைகளையும் நிறைவேற்றாது தமது உரிமைக்காக மட்டும் போரிடும் சமூகத்திற்கு தத்தமக்குரிய கடமையை எடுத்துக்காட்டும் சூத்திர தர்மமாவது
(1) பராபவ சூத்திரமாகும். (2) சிங்காலோவாத சூத்திரமாகும்.
(3) மங்கல சூத்திரமாகும். (4) வசல சூத்திரமாகும்.

32. பல்லின, பல்வகை மதங்களைக் கொண்ட சமூகத்தில் சகவாழ்வுடன் வாழ்வதற்கு உதவும் விடயங்கள் அடங்கிய பௌத்த கற்பித்தல்
(1) சதர சங்கிரக வஸ்து ஆகும். (2) சதர அகதி ஆகும்.
(3) சதர ர்திபாத ஆகும். (4) சதர சதிபட்டான ஆகும்.

33. நாட்டில் நிலவும் சட்டத்திற்கு ஏற்றவாறு குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிப்பதிலிருந்து வெளிச்செல்லாது துன்பம் தரும் செயல்களின்றி அரச நிர்வாகத்தை நடத்துதல் தசராஜ தர்மத்தில் இனங்காணப்படுவது
(1) தபஸ (துறவறம்) என்றாகும். (2) மிருதுபவ (மென்மையானது) என்றாகும்.
(3) அக்ரோதய (கோபமற்ற) என்றாகும். (4) அவிஹிம்சா (அஹிம்சை) என்றாகும்.

34. முதலாம் பௌத்த மகாநாட்டில் தர்மத்தை வாய்மொழி மூலம் பேணுவதற்கு பாணக பரம்பரையிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் சங்யுக்த நிகாய வாய்மொழி மூலம் பேணுவதற்காக ஒப்படைக்கப்பட்டது
(1) ஆனந்த தேரரின் தலைமையிலான மாணவர் பரம்பரைக்காகும்.
(2) சாரிபுத்த தேரரின் மாணவர் பரம்பரைக்காகும்.
(3) அனுருத்த தேரரின் தலைமையிலான மாணவர் பரம்பரைக்காகும்.
(4) மகாகாசியப்ப தேரரின் தலைமையிலான மாணவர் பரம்பரைக்காகும்.

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**35.** இரண்டாவது பௌத்த மகாநாட்டின் விளைவுகள் தொகுதியைச் **சாராத** விடயம்
(1) தச வஸ்துவை நிராகரித்தல்
(2) பதினெட்டு பிரிவுகள் (அட்டலொஸ்நிகாய) தோன்றுதல்
(3) நல்லொழுக்கமில்லாத பிக்குகள் துரத்தப்படுதல்
(4) நல்லொழுக்கத்துக்கு எதிராகச் செயற்பட்ட பிக்குகள் அவமதிக்கப்படுதல்

**36.** ஐந்நூறு கோட்பாடுகளை கண்டனம் செய்து ஐந்நூறு சொந்தக் கோட்பாடுகளை உள்ளடக்கி மொக்கலிபுத்த திஸ்ஸ தேரரால் தொகுக்கப்பட்ட நூல்
(1) தாதுகதாப்பகரணய
(2) தம்மசங்கணிப்பகரணய
(3) பட்டானப்பகரணய
(4) கதாவத்துப்பகரணய

**37.** கந்தார பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட நாணயம் மற்றும் புனித சின்னப் பேழையில் புத்தரின் உருவத்தை காணக்கூடியதாயிருப்பது கிரேக்க - உரோம கலையின் செல்வாக்கினால் புத்தரின் சிலைகளை செதுக்குதல் ஆரம்பிக்கப்பட்டது என்பதைக் காட்டுகிறது. இவ்வாறு புத்தர் சிலைகள் ஆரம்பமானது
(1) மௌரியர் ஆட்சிக் காலத்திலாகும்.
(2) அசோகன் ஆட்சிக் காலத்திலாகும்.
(3) கனிஷ்கர் ஆட்சிக் காலத்திலாகும்.
(4) கோசல ஆட்சிக் காலத்திலாகும்.

**38.** கந்தகுடி, பாஸாத, கெடிகே, தம்பிட்ட விகாரை என்ற பெயர்களால் இனங்காணப்பட்டது
(1) போதிமனை (போதிகர) ஆகும்.
(2) சிலைமனை (பிரதிமாகர) ஆகும்.
(3) தியானமனை (பதானகர) ஆகும்.
(4) தூபிமனை (சேத்தியகர) ஆகும்.

**39.** மகியங்கனைத் தூபி, களனி விகாரைத் தூபி, அபயகிரித் தூபி என்பவற்றின் மாதிரிகளை ஒழுங்குமுறையில் குறிப்பிடும் சரியான தெரிவு
(1) கண்டாகார, தான்யாகார, புப்புலாகார
(2) கடாகார, கண்டாகார, புப்புலாகார
(3) கண்டாகார, தானியாகார, கடாகார
(4) தான்யாகார, புப்புலாகார, பத்மாகார

**40.** புத்த பெருமான் தேவலோகத்திலிருந்து சங்கஸ்ஸபுரவுக்கு வருகைதருதலும் சச, வெஸ்ஸந்தர, சாம ஆகிய ஜாதகக் கதைகளும் ஓவியமாக்கப்பட்டுள்ள பொலன்னறுவைக் காலத்துக்குரிய இடம்
(1) திம்புலாகலை குகைக் கோவில்
(2) திவங்க சிலைமனை
(3) ஹிந்தகலை விகாரை
(4) தம்புள்ளை விகாரை

* *



Department of Examinations - Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations - Sri Lanka